மாநகராட்சி மன்றம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 07 (21-05-1998) வியாழக்கிழமை UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 149

# பெர்னாண்டஸின் புலிகள் ஆதரவு போக்குக் குறித்துப் பெரும் சர்ச்சை!

## பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து அவரை விலக்குமாறு வற்புறுத்தல்

லண்டன், மே 21

இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தொடர்ந்து ஆதரவு வழங்குவதாகக் கூறப்படுவது குறித்து அங்கு பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

இக்காரணத்துக்காக அவர் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்; அல்லது இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

இந்தியாவின் அணுகுண்டுப் பரிசோதனைகளினால் தேசிய மட்டத்தில் பெரும் புகழையும் பெருமையையும் சம்பாதித்திருக்கும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸிற்கு நெருக்கடி தரும் விதத்தில் புலிகள் ஆதரவு விவகாரத்தை பிரதான எதிர்க்கட்சிகள் தூக்கிப் பிடிக்கத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் குறித்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பீற்றர் அல்போன்ஸ், பொருளாளர் சுதர்ஷன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு இராணுவத்தினர், ஆறு புலிகள் கிளிநொச்சிச் சமரில் உயிரிழப்பு

வவுனியா, மே 21

கிளிநொச்சி மாவட்டத்தில் கரடிப் போக்குச் சந்தியில் இருந்து நேற்று அதிகாலை 2 மணியளவில் மூன்றாம் வாய்க்கால் பகுதியைநோக்கி நகர்வை மேற்கொள்ள முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது படையினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிவிட்டதாகப் 'புலிகளின் குரல்' அறிவித்தது.

இச் சமரின் போது படையினர் ஒருவரின் சடலமும், ரி 56 – 2 ரகத் துப்பாக்கிகள் நான்கும், 40 மி.மீ. பிஸ்டல் ஒன்றும் தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் —

புலிகள் தரப்பில் ஆறு பேர் களப்பலியானார்கள் என்றும் —

'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது.

நேற்று அதிகாலை இடம் பெற்ற இத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் —

12 படையினர் காயமடைந்ததாகவும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது. [உ–3–21]

## முல்லைத்தீவில் இருந்து வந்த நபரே லறிமீது குண்டுத்தாக்குதல் நடத்தினார்

### பூர்வாங்க விசாரணைகளில் தகவலாம்

கொழும்பு, மே 21

கடந்த வாரம் பருத்தித்துறையில் தற்கொலைத் தாக்குதல்மூலம் மேஜர்ஜெனரல் லறி விஜயரட்னாவைக் கொலை செய்த நபர் முல்லைத்தீவில் இருந்து சாதாரண பிரஜை ஒருவர் போன்று பருத்தித்துறைக்கு வந்துள்ளார் என்றும்—

பருத்தித்துறையில்வைத்து அவருக்கு விடுதலைப் புலிகளின் முகவர் ஒருவர் தற்கொலைத் தாக்குதல் அங்கியை வழங்கியுள்ளார் என்றும்—

பூர்வாங்க விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன:

மேஜர் ஜெனரல் லறி விஜயரட்னாவின் கொலைச் சம்பவம் தொடர்பான செயன்முறை விளக்கத்தை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு நேற்று முன்தினம் இராணுவத்தினர் வழங்கினார்கள்.

பருத்தித்துறையில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இடம்பெற்ற இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மினி முகாம் ஒன்றின் மீது மன்னாரில் தாக்குதல்

### 4 படையினர் உயிரிழப்பு?

வவுனியா, மே 21

மன்னாரில் செட்டியார் கட்டை, அடம்பன், கொம்பு பாஞ்சான் என்னும்இடத்தில் உள்ள இராணுவ மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் கடந்த திங்கட்கிழமை காலை 5.30 மணியளவில் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்ததாகவும் —

அந்த முகாம் மீது 10நிமிட நேரம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் முகாமைக் கைப்பற்றி தாங்கள் அழித்ததாகவும் —

படையினர் தரப்பில் நால்வர் உயிரிழந்ததாகவும் —

( 10ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

வவுனியா, மே 21

வன்னியில் 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் ஒலுமடு நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர். (உ–5)

## சரோஜினியின் பூதவுடல் கொழும்பில் தகனம்

### சந்திரிகா, ரணில் அஞ்சலி

கொழும்பு, மே 21

கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். நகர மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் பூதவுடல் நேற்று மாலை சைவமுறைப்படி கனத்தை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

பொறளையில் உள்ள ஏ. எவ். றேமன் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கே. பி. ரத்னாயக்க, புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் உட்பட அமைச்சர்கள், எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் உட்படப் பலர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மேயர் கொலைக்கு மன்னிப்புசபை கண்டனம்

கொழும்பு, மே 21

யாழ். மாநகர மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டதை சர்வதேச மன்னிப்புச் சபையும், ஸ்ரீலங்கா தேசிய அமைதிக் கவுன்சிலும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

முன்னர் கேள்விப்பட்டிராத 'சங்கிலியன் படை' என்ற குழு இக்கொலைக்குப் பொறுப்பேற்றிருப்பதாகவும் —

புலிகளின் ஒரு பிரிவே இந்தச் சங்கிலியன் குழு எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் —

செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே அரசியல் பொறுப்புள்ள யாழ். மேயர் கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்து ஓர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நகராட்சி மன்ற விவகாரம்:

## திருமலையில் நேற்று உண்ணாவிரதம்

திருகோணமலை, மே 21

திருகோணமலை நகராட்சி மன்றத்தை சுயமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என்றும் —

நகர நிர்வாகத்தில் படையினரின் தலையீட்டை நீக்க வேண்டும் என்றும்—

நகராட்சிமன்றத்தால் நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தையை திறக்க படையினரால் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும் என்றும் —

கோரி திருகோணமலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலத்தை எதிர்க்க கோரி வெகுஜனப் போர்

திருகோணமலை, மே 21

எதிர்வரும் 17 ஆம் திகதி அவசரகால நீடிப்புத் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போது, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் எனக் கோரும் வெகுஜனப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினர் மீண்டும் சேர வாய்ப்பு

### 16மணி நேர கால அவகாசம்

கொழும்பு, மே 21

படைகளில் இருந்து தப்பி ஓடியோர் மீண்டும் படையில் இணைந்து கொள்வதற்காக 16 மணித்தியால அவகாசம் மீண்டும் ஒரு முறை அளிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

தப்பியோடிய படையினர் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 8 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நாகரெத்தினம்

(முன்னாள் யாழ். பொது நூலகர்)

வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவரும் யாழ். பொதுசன நூல் நிலையத்தின் ஆரம்பகால பிரதான நூலகராயிருந்து ஓய்வுபெற்றவருமாகிய நாகரெத்தினம், 18 – 5 – 98 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் வண்ணை மகாலட்சுமி மரக்காலை உரிமையாளர் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய ரகுநாதன் (பொறியியலாளர் — லண்டன்), மீனலோசனி இராசரெத்தினம் (ஓமான்) மற்றும் ஆஸ்திரேலியா ரவீந்திரநாதன், ரமணன், நீலலோஜினி; லண்டன்— ராதாபத்திரநாதன், ரங்கநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணக்காளர் இராசரெத்தினம் (ஓமான்), பொறியியலாளர் தணிகாசலம் (ஆஸ்திரேலியா) மற்றும் வத்சலா, சசிகலா, மனோகரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வண்ணை (ஆங்கில/சிங்கள) ஆசிரியர் சகாதேவனின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 23 - 5 – 98 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. சகாதேவன்
(மைத்துனர்)

46, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(56133)

## அருட்திரு F.J.ஸ்ரனிஸ்லோஸ்

(அ. ம. தி.)

யாழ். மாகாண அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு F. J. ஸ்ரனிஸ்லோஸ் 20-05-1998 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவரின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக இன்று (21-05-98) வியாழக்கிழமை கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் வைக்கப்படும்.

இவரின் இறுதிச் சடங்குகள் யாழ். மரியன்னை பேராலயத்தில் நாளை (22-05-98) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு (புதிய நேரம்) பலிப்பூசையுடன் நிறைவேற்றப்படும்.

தகவல்:
அருட்திரு P. J. யேசுநேசன் (அ ம.தி.)
(யாழ். மாகாண முதல்வர்)

கொழும்புத்துறை.

(56138)

## தம்பையா நடேசபிள்ளை

(முன்னாள் ஊழியர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா நடேசபிள்ளை 16 – 05 – 98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சித்த ஆயுர்வேத வைத்தியர் தம்பையா அவர்களின் அன்பு மகனும், தங்கரெத்தினத்தின் அன்புக் கணவரும், சுமதி, ஸ்ரீரஞ்சன் (மாலைநேர மாணவன் A.T.I). சுலோஜனா, ஸ்ரீகுமார் (மாணவன், யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ந.சிவகுமாரின் (இத்தாலி) மாமனாரும், த. ராசரத்தினம் (ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை), த. கனகம்மா, சு. அன்னலட்சுமி, ந. ராசம்மா, ஆ. செல்லம்மா, த. மங்கையர்க்கரசி, த. சோமசுந்தரம் (ஆயுர்வேத வைத்திய கலாநிதி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-05-98) வியாழக்கிழமை தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
ந. ஸ்ரீரஞ்சன்

''லக்சுமி வாசா'',
K K S றோட்,
கோண்டாவில் மேற்கு.

[56150]

## இராசரத்தினம் சுந்தரமூர்த்தி

தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடி, 210, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும், யாழ்ப்பாணம் சுந்தரமூர்த்தி & Sons உரிமையாளருமாகிய இராசரத்தினம் சுந்தரமூர்த்தி 19-5-98 இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற முத்துத்தம்பி மீனாட்சியம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பாளின் அன்புக் கணவரும், உருத்திரகுமாரன், சிவபாலன் (Swiss), காலஞ்சென்ற மகாதேவன், திருமதி கிரிஜா (லண்டன்), பிரேமலதா (லண்டன்), இராசரத்தினகுமாரன் (லண்டன்), சுதாயினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இரவீந்திரன் (லண்டன்), தர்மினி (Swiss) ஆகியோரின் மாமனாரும், R. T. சம்பந்தர், சந்திரசேகரம், சிவகுமாரன், சிவதாஸ், சண்முகலிங்கம், சிவசுப்பிரமணியம், பாலேந்திரா, சடாட்சரதேவி ஆகியோரின் அன்புத் தமையனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 210, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை (21-5-1998) பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

210, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(56141)

## குடும்பஸ்தர் பலி!

மரத்துடன் உடல்பாகத்தை இணைத்துக் கயிற்றினால் கட்டிவிட்டு, கள்ளு எடுத்துக் கொண்டு நின்றவரின் கால்களை இணைத்துப் போடப்பட்டிருந்ததளைநார் அறுந்ததால் கட்டப்பட்டிருந்த கயிறுடன் மரத்துடன் உரசியபடி கீழே வீழ்ந்த இளம் குடும்பஸ்தர் பலியானசம்பவம் கடந்த வியாழக்கிழமை அனலைதீவில் இடம்பெற்றது.

இரண்டு மணித்தியாலங்களாகக் காணாததால் தேடிச் சென்ற உறவினர் அடிமரத்துடன் கயிறு இறுக்கிய நிலையில் ஆபத்தான இடத்தில் காணப்பட்டதால் அவரை மீட்டு உடனடியாகக் கடற்படையினரின் படகு மூலம் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். பின்னர் வரும் வழியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சுப்பர் கருணாநிதி(வயது 35) என்பவரே மரணமானவராவார். (உ–117)

## மட்டு நகரில் தேடுதல்

மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தியுள்ளனர்.

வழமையான சோதனைச் சாவடிகளை விட மேலும் பல முக்கியமான இடங்களிலும் படையினர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதனால் வழமை நிலை பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–3)

## லண்டன் பயணம்

பிரித்தானிய சைவத்திருக் கோயில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்முதலாவதுசைவ மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில லண்டனில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் இலங்கையில் இருந்து தமிழருவி த. சிவகுமாரன், அருள்மொழி அரசு வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்திய நாதன், க. உமாமகேஸ்வரன், இளைப்பாறிய பொறியியலாளர் க.கணேசலிங்கம் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.


**நாகங்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
21 – 05 – 98 வியாழன்
அகல வெண் திரையில்
கார்த்திக், மீனா
நடித்த
அரிச்சந்திரா
(புதிய வெளியீடு)
காட்சி 10– 30 — 2–30
(56149)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
கார்த்திக், மீனா,
ஹீரா நடிக்கும்
அரிச்சந்திரா
புதிய வெளியீடு
நேரம்:– 10-30, 2–30
பழைய நேரம்
தொலை பேசி இல.
070 – 212223
(55969)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
கார்த்திக், சௌந்தர்யா
நடித்த
பொன்னுமணி
தினசரி
1–00, 4–00
சனி, ஞாயிறு
காலை 10–00 — 1–00, 4–00
(புதிய நேரம்)
(சி/3788)


# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை எட்வேட் தம்பையா

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், புகையிரதப் பகுதி)

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை எட்வேட் தம்பையா 19 – 5 - 98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மங்களத்தின் அன்புக்கணவரும், பிமால் (கனடா), மோகன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற துவாரகா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை லோட்டன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
அருட்திரு S. C. ஆனல்ட்

தென்னிந்திய திருச்சபை,
நவாலி.

(56146)

## வினாசித்தம்பி சோமஸ்கந்தா

(உரிமையாளர், கல்யாணி ஸ்ரோர்ஸ், கண்டி)

வினாசித்தம்பி சோமஸ்கந்தர் 19–05–98 செவ்வாய்க்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - கதிராசிப்பிள்ளையின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற இளையதம்பி – தங்கம்மாவின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், விஜயகுமார், ரவீந்திரகுமார் (கனடா), மஞ்சுளா (ஆஸ்திரேலியா), விஜயகல்யாணி (கனடா), சரவணகுமார் (கண்டி), ஸ்ரீதேவி (ஆசிரியை, யா/ அம்மன் அ. மி. த. க. பாடசாலை), பர்வதபத்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகராசா, சூரியமூர்த்தி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவனேஸ்வரி, அம்பிகா தவனேந்திரராஜா, சிவனேந்திரராஜா, வினோராணி, முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகரத்தினம் (பிரான்ஸ்), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், அபிராமி, அபிராம், டிலானி, டிலக்சன். நிர்த்திகா, நிருபிகா, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சோ. விசாலாட்சி
(மனைவி)

களையாவோடை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(56153)

## நாகேந்திரம் தம்பிப்பிள்ளை

(முன்னாள் ஊழியர், கட்டடத்திணைக்களம்)

நாகேந்திரம் தம்பிப்பிள்ளை 15 – 05 – 1998 இல் காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக வேம்பிராய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. கிருபா

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(56148)

## திருமதி செல்லத்துரை வள்ளியம்மை

(சின்னம்மா)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், முத்திரைச் சந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை வள்ளியம்மை கொழும்பில் 19-05–1998 இல் காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை நாகாத்தை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (J. P.), சிவக்கொழுந்து, யோகம்மா, அமிர்தம், க. தர்மலிங்கம், க. நமசிவாயம், ந. சபாபதி ஆகியோரின் சகோதரியும், சி. கோமதி (கொழும்பு), செ. வரதராஜா (ஜேர்மனி), வசந்தா (வவுனியா), வனிதா (செட்டிக்குளம்), முருகானந்தம் (ஜேர்மனி), லோ. கலாநிதி (நல்லூர்), தயாநிதி (சுவிஸ்), ஆனந்தராசா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலன் (ஜேர்மனி), சுப்பிரமணியம் (பிரான்ஸ்), லோகராஜா (செட்டிகுளம்), லோகப்பிரகாஸ், அருளானந்தம் (சுவிஸ்), உதயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், குகநாதன், சிவரூபி, முகுந்தன், ந. றஞ்சினி, விஜயன், கீதா, வித்தியாதினி, வினோ, விஜிதா, நிஷாந்தினி, சர்வேந்திரா, துஷ்யந்தினி, சகானா, அரவிந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. லோகப்பிரகாஸ்
(லோகன்) (மருமகன்)

இல. 860, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தை.

[56152]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசிய நிலைவரம்

# நாடாளுமன்றக் கட்டடம் மாணவரினால் முற்றுகை

ஜகார்த்தா, மே 21

அதிபர் சுஹார்ட்டோ பதவி விலக வேண்டும் எனக் கோரிவரும் இந்தோனேசிய மாணவர்கள் அந்நாட்டு நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு தமது பொறுப்பில் வைத்துள்ளனர்.

நாடாளுமன்ற கட்டடத்தின் மைதானத்தில் சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் தங்கியிருந்தனர்.

மாணவர்கள் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைந்தபோது ஆயுதம் தாங்கிய படையினர் அவர்களை தடுக்கவில்லை.

மஞ்சள் நிற பாடசாலை சீருடை அணிந்த மாணவர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் அமைதியாக அங்கு திரண்டனர்.

(ஐ)

# சீனாவில் உள்ள இந்திய தூதர் திருப்பி அழைப்பு

புதுடில்லி, மே 21

சீனாவுக்கான இந்தியத் தூதர் விஜய்கே நம்பியாரை புதுடில்லிக்கு வருமாறு இந்தியா அழைத்துள்ளது.

நேற்று முன்தினம் சீனா இந்தியாவுக்கு எதிராகத் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அடுத்து அவசர ஆலோசனை நடத்தும் நிமித்தம் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

பொக்ரான் அணு ஆயுத சோதனைகளுக்குப் பிறகு இந்தியாவும், சீனாவும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றன.

சீனாவின் குற்றச்சாட்டுக்களை பிரதமரின் அரசியல் ஆலோசகர் பிரமோத் மகாஜன் நிராகரித்துள்ளார்.

1962இல் இந்தியாவே போரைத் தொடங்கியதாகவும், தனது பிரதேசத்தில் 90 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் சீனா குற்றஞ் சாட்டியுள்ளது.

(ஐ-8)

# ராணுவமுன் ஆயத்தங்களால் ஜகார்த்தாவில் பீதி அதிகரிப்பு

## மாணவர் எழுச்சியை தவிர்க்க முயற்சி

ஜகார்த்தா மே 21

இந்தோனேசிய மாணவர்கள் நடத்த திட்டமிட்டிருந்த தேசிய எழுச்சி நாள் போராட்டத்தை எதிர்கொள்ள இராணுவம் முன் ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டு வருவதால் ஜகார்த்தாவில் பீதி அதிகரித்து வருகிறது.

மத்திய ஜகார்த்தாவில் படையினர் தமது நிலைகளை விஸ்தரித்து வருகின்றனர்.

மாணவர்கள் தங்கள் தேசிய எழுச்சி நாளை நேற்று பின்னராக ஜகார்த்தாவின் தேசிய நினைவிடத்தில் நடத்த திட்டமிட்டிருந்தனர். அதனையடுத்து அப்பிரதேசத்தைச் சுற்றிவளைக்கும் விதமாக வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

தேசிய எழுச்சி நாள் போராட்டத்தைக் கைவிடுமாறு மாணவர்களைத் தூண்டும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் அமீன் ராசிஸ் கடைசிநேரம் வரை ஈடுபட்டிருந்தார்.

(ஐ)

உலக அரங்கில்

# ஆறாவது அணுவல்லரசாக இந்தியாவை அங்கீகரிக்குக

## பிரிட்டனில் கோரிக்கை

புதுடில்லி, மே 21

இந்தியாவை உலகின் ஆறாவது அணு ஆயுத நாடாக அங்கீகரிக்குமாறு பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் சில உறுப்பினர்கள் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர்.

புதுடில்லி அணு ஆயுத சோதனை நடத்தியிருப்பது பற்றி இப்போது கூச்சலிடுவது எதிர்மறையானதுஎன்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஏனெனில் உலகில் மிகப் பெரிய ஜனநாயகத்தின் பாதுகாப்பு நலன்கள் விடயத்தில் மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து கண்ணைமூடிக் கொண்டு வந்துள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

சபையில் நடந்த விவாதத்தில் வார்ட் சன்னட் பேசுகையில் பிரிட்டனுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்குமானால் இந்தியா யோசனை கூறியது போல பேரழிவு ஆயுதங்களை அறவே ஒழிப்பது தான் அதற்கு ஒரே பதில் என்று கூறினார்.

(ஐ-8)

# அமெரிக்காவின் உளவு செய்மதியை ஏமாற்றிவிட்ட இந்தியவிஞ்ஞானிகள்

புதுடில்லி, மே 21

இந்தியா அண்மையில் நடத்திய அணுவெடிப் பரிசோதனைகள் உலகை வியப்பில் ஆழ்த்தியது. அந்த அணுகுண்டுச் சோதனை பற்றிய தகவலை முன் கூட்டியே அறிந்துகொள்ள சீ. ஐ. ஏ. தவறிவிட்டது என்பது அமெரிக்க மக்களுக்கு மாத்திரமன்றி பல்வேறு நாட்டு மக்களுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க உளவுச் செய்மதிகளை இந்திய விஞ்ஞானிகள் எவ்வாறு ஏமாற்றினார்கள் என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்திய விஞ்ஞானிகள் பல்வேறு தந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டதால் உளவுச்செய்மதிகளுக்கு அணுகுண்டுச் சோதனை ஆயத்தப் பணிகள் தெரியவில்லை என்று சீ. ஐ ஏ. செய்தித் தொடர்பாளர் பில்ஹர்லோ தெரிவித்தார்.

மே மாதம் ராஜஸ்தான் பாலைவனத்தில் வழக்கத்தை விடக் கூடுதல் வெயில் இருக்கும். இந்த நேரத்தில் பாலைவனத்தைப் படம் பிடித்தால் அது தெளிவாக இருக்காது. எனவே இந்த மாதத்தை விஞ்ஞானிகள் சோதனைக்குரிய காலமாகத் தெரிவு செய்தனர்.

தன்னிச்சையான செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியா மற்ற நாட்டு செய்மதிகளைக் கண்காணிக்கும் அளவுக்கு முன்னேறி உள்ளது. இதனால் அமெரிக்க உளவு செயற்கைக் கோள்கள் இந்தியப் பகுதியைக் கடந்து வெகு தூரத்தில் செல்லும் நேரத்தைக் கணக்கிட்டு அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டு உள்ளது. இதனால் உளவுக் கோள்களின் கண்ணில் அணு குண்டுச் சோதனை சிக்கவில்லை.

மேலும் அணு ஆராய்ச்சியில் இந்தியா தன்னிச்சை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அணு சோதனை நடத்திய இடத்தை பிரதமர் வாஜ்பாய் பார்வையிட்டார்

புதுடில்லி, மே 21

இராஜஸ்தான் மாநிலம் பொஹ்ரானில் (Pokhran) கடந்த வாரம் இந்திய 5 அணு ஆயுத சோதனைகளை நடத்திய புத்தஸ்தலத்துக்கு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்று விஜயம் செய்தார்.

அவருடன் பிரதமரின் அரசியல் ஆலோசகர் பிரமோத் மகாஜன், திட்டக்கமிஷன் துணைத்தலைவர் ஜஸ்வத்சிங், ஜம்முகஸ்மீர் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா, இராஜஸ்தான் மாநில ஆளுநர் தர்மாராசிங், இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அக்காலத் ஆகியோரும் சென்றிருந்தனர்.

பிரதமர் தமது விஜயத்தின்போது பொஹ்ரானில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்ற இருந்தார்.

(ஐ-8)

# பங்களாதேஷை புயல் தாக்கும்

டாக்கா, மே 21

பங்களாதேஷின் தென் கிழக்குப் பகுதியை கடும் புயல் தாக்கும் ஆபத்து உருவாகியதை அடுத்து 2 லட்சம் பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதி உஷார் நிலையில வைக்கப்பட்டுள்ளது.

முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ)

## அரச திணைக்களங்களுக்கு

# மாஹோவில் வந்த பொருள்கள் மறைவு!

யாழ்ப்பாணம், மே 21

'மாஹோ' கப்பலில் அரச திணைக்களங்களுக்கென கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களில் பல காணாமற் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பலகைப் பெட்டிகளுக்குள் பொதி செய்து அனுப்பி வைக்கப்பட்ட இப்பொருள்களில் பல காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்பட்ட போது அவை காட்போர்ட் பெட்டிகளுக்குள் வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் அனுப்பப்படும் பொருள்கள் பல முன்னரும் காணாமற் போயிருந்தன. இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொருள்கள் சில காலம் ஒழுங்காக வந்து சேர்ந்தன.

தற்பொழுது மீண்டும் கப்பலில் வரும் பொருள்கள் களவு போகத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிபது.

(ஐ-5)

## மீண்டும் பஸ் சேவை

வட்டுக்கோட்டை, மே 21

மிக மோசமான நிலையில் இருந்த வட்டுக்கோட்டை—சித்தன்கேணி வீதி திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

வீதிச்சீர்கேடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ள 789ஆம் இலக்க யாழ். மாதகல் போக்குவரத்துச்சபை பஸ் சேவை மீண்டும் சில நாள்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(ஐ-12)

# 47 குளங்கள், 12 விவசாய வீதிகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படும்

திருநெல்வேலி, மே 21

ஐ. நா. உலக உணவுத் திட்டத்தின் கீழ் (W. F. O) யாழ். மாவட்டத்தில் 47 குளங்களும், 12 விவசாய வீதிகளும் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இப் புனரமைப்பு வேலைகள் யாவும் அவ்வப் பகுதி விவசாய சம்மேளனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும். தினவரவுஇடாப்பு பதிவின் படி வேலை செய்பவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புனரமைப்பு பணிகளுக்கான ஆரம்ப மதிப்பீடுகள் யாழ். கமநலச் சேவைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு கொழும்பிலுள்ள ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பின்வரும் குளங்களும் விவசாய வீதிகளும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

★ வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 10 குளங்கள்,5 விவசாய வீதிகள்.

★ வலி. கிழக்கு பிரதேச செயலர்பிரிவில் 9 குளங்கள், 7 விவசாய வீதிகள்.

★ வலி. தெற்கு பிரதேச செயலர்பிரிவில்10 குளங்கள்.

★ வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 4 குளங்கள்.

★ வேலணைபிரதேச செயலர் பிரிவில் 6 குளங்கள்.

★ ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 4 குளங்கள்.

★ வலி. மேற்குப் பிரிவில் 2 குளங்கள்.

★ நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் 2 குளங்கள்.

(ஐ-135)

## நாளை

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அருள்மிகு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமைமுற் பகல் 10-30 மணிக்கு கலை நிகழ்வு துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளால் நடத்தப்படும்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை துர்க்காபுரம் அன்னைசிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி வழங்குவார்.

(ஐ-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய தேவைக்கான ம.எண்ணெய் அளவை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட விவசாயத் தேவைக்கென பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஒதுக்கிடு செய்யப்பட்ட மண்எண்ணெயின் அளவு போதாமலுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது ஆயிரத்து 500 ஹெக்டேயர் விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சப் படுகின்றது. இதற்கு ஒவ்வொரு மாதமும் 3 லட்சம் லீற்றர் மண்எண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் 1 லட்சத்து 25 ஆயிரம் லீற்றர் மண்எண்ணெயே தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மண்எண்ணெய்உதவி விவசாயப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் எரிபொருள் நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒருபரப்புக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையிலே இந்த விநியோகம் நடைபெறுகிறது.

விவசாயிகளுக்கு ஒதுக்கப்படும் மண்எண்ணெயின் அளவை 3 லட்சம் லீற்றராக அதிகரிக்குமாறு விவசாயத் திணைக்கள அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-5)

# தனிப்பட்டோரை கொன்று பிரச்சினை தீரமாட்டாது

## சம்பந்தன் கூறுகிறார்

கொழும்பு, மே 21

தனிப்பட்டவர்களைப் படுகொலை செய்வதால் ஸ்ரீலங்காவில் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் கொழும்புஹவ்லொக் வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் திருமதி சறோஜினி யோகேஸ்வரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றிய கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தத்தால் பிரச்சினைக்கு எவ்விதம் தீர்வு காணமுடியாது அவ்வாறே தனிப்பட்டவர்களை படுகொலை செய்வதாலும் தீர்வுகாண முடியாது என அவர் மேலும்தெரிவித்தார்.

( இ-7)

# வவுனியா நகரசபையின் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் மக்களுக்குச் சேவையாற்றவென யாழ் மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அதிலும் ஒரு பெண் மேயர் கொலை செய்யப்பட்ட செயலானது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு வவுனியா நகர சபைத் தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் வவுனியாவில் வெளியிட்ட செய்திக் நேற்று முன்தினம் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கட்சி ரீதியாக இருந்தாலும் தனிப்பட்ட முறையிலாக இருந்தாலும் யாழ். நகரை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என காலஞ்சென்ற யாழ். மேயர் சரோஜினி யோகேஸ்வரன் ஆர்வம் கொண்டிருந்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா மன்னார் போன்ற பிரதேசங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உள்ளூராட்சிச்சபைகள் பெரிதும் உதவி புரிந்துள்ளன. அவ்வாறேயாழ்.மாநகரசபை மூலம் யாழ். நகரைக்கட்டியெழுப்பமுடியும் என திருமதி சரோஜினி யோகேஸ்வரன் நம்பிக்கை கொண்டிருந்தார்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6-7-164)

# வீதிகள் திருத்தப்படவில்லை

திருநெல்வேலி, மே 21

யாழ். இந்து மகளிர் கல்லூரியிலிருந்து பலாலி வீதி வரை செல்லும்ஒழுங்கையும், குமாரசாமி வீதியும் மிகவும் சேதமடைந்து சீர்கெட்ட நிலையில் உள்ளன.

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருப்பதால் இவ் வீதிகள் வழியாகச் செல்லும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் ஏனையோரும் சிரமமடைந்து வருகின்றனர்.

கந்தர்மடம் வடக்கு — கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் இவ்வீதிகளை திருத்தி உதவுமாறு யாழ். மாநகர சபை நிர்வாகத்திடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ-135)

# வன்னி யுத்த முனைகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தம்

வவுனியா, மே 21

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பிரதேசங்களில் நேற்று முன்தினம்முழு நாளும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களும், துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டவண்ணம் இருந்ததாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக இராணுவத் தரப்புடன் தொடர்பு கொண்டபோது வெற்றி உறுதி நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகிவிட்டதாக தெரிவித்தன. எனினும் இத்தகவலை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

(இ-164-7)

# புதிய மலசலகூடம்

மானிப்பாய், மே 21

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த மாணவர்களுக்கான மலசலகூட அமைப்புப் பணி முடிவடைந்துள்ளது. நேற்றுக் காலை 9-00மணிக்கு மலசலகூடம் திறந்து வைக்கப்பட்டது.

(ஐ-90)

# யாழ். வர இருந்த சிப்பாய் கால்வாயில் வீழ்ந்து பலி!

## திருமலையில் சம்பவம்

கொழும்பு, மே 21

யாழ்ப்பாணத்துக்குஅனுப்பி வைக்கப்படுவதற்காகக் கொழும்பில் இருந்து கூட்டிவரப்பட்டு திருகோணமலை கிளப்பன் பேர்க் என்னுமிடத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 700 படையினரில் ஒருவர் கால்வாய் ஒன்றினுள் வீழ்ந்து மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் படையினர் தங்க வைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகில் இருந்த கால்வாயினுள் வீழ்ந்து காணப்பட்ட ராஜபக்ஸ தேவாலகே நிமால் பியசிறி [21 வயது] என்ற இராணுவச் சிப்பாயை சக இராணுவ வீரர்கள் சிலர் திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவர் மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது.

மஹியங்கனையை சேர்ந்த இவர் யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் அனுப்பிவைக்கப் படுவதற்காக 16 ஆம் திகதி திருகோணமலைக்குக் கூட்டிவரப்பட்ட படையினரில் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதிவான் ஏ. சி. ஹஜ்ஜு முகமது நேற்று முனதினம் திங்கள் மாலை மரண விசாரணையை நடத்தவிருந்தார். சீனன்வாடிப் பொலீஸார் இம்மரணம் தொடர்பான விசாரணையை நடத்தினார்கள்.

(இ-6-10)

# பாரதிபுரம் படுகொலை வழக்கு விசாரணை

தம்பலகமம் பகுதியில் உள்ள பாரதிபுரம், பொக்குறுணி கிராமங்களில்கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இடம்பெற்ற 8 தமிழ்ப் பொது மக்களின்படுகொலை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம்திருமலை நீதிவான் பி. சொர்ணராஜ் முன்னிலையில் விசாரணைககு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் எதிராளிகளான பொலீஸாரையும், ஊர்காவல் படையினரையும் பிணையில் விடுமாறு எதிரிகள் சார்பில் ஆஜரான எ. டபிள்யு எ. சத்தார், எம். கே. எம் சாலி, செல்வி சாமினி பெரேரா ஆகியோர் விடுத்த வேண்டுகோளை நீதிவான் நிராகரித்து விட்டார்.

இந்த வழக்கு தொடர்பாக எதிரிகள் மீதான குற்றப்பத்திரிகை இன்னும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமையினாலேயே எதிரிகளை அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் கொலையுண்ட பொதுமக்கள் சார்பில் மனித உரிமைகள் நிறுவன சட்டத்தரணிகளான எஸ். ரட்ணவேல், எம். கே. செல்வர்ாசா ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

(இ-7)

## எயர்லங்கா விவாதம்

# அரசாங்கக் கட்சிமீது பல குற்றச்சாட்டுக்கள்

எயர்லங்கா நிறுவனத்தின பங்கை எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு விற்றது தொடர்பாக நேற்று முன்தினம்நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தின் போது அரசாங்கக் கட்சி மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த விவாதம் கடுமையான சூடு பிடித்ததுடன் இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட வாத, பிரதிவாதங்கள் சுமார் எட்டு மணித்தியாலம் வரை நீடித்தன.

சுற்றுலா விமானத்துறை அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்க பேசுகையில் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் எயர் லங்கா நிறுவனத்துக்கும் எமிரேட்ஸுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் கிழித்து எறியப் போவதில்லை என்று ஐ.தே.க. அறிக்கை ஒன்றை விடுமா? என்று சவால் விட்டார்.

எயர் லங்கா தொடர்பான நிலைப்பாட்டை ஐ. தே. க. திட்ட வட்டமாக விளக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விவாதத்தில் கலந்து கொண்ட கருணாசேன கொடித்துவக்கு இது பற்றிக் கூறுகையில், எயர் லங்கா தனியார் மயப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருந்திருந்தால் முதலில் உள்நாட்டு முதலீட்டாளர்களின் ஆலோசனை பெறப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க பேசுகையில் எயர் லங்காவை தனியார் மயப்படுத்துவதால் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்றார்.

விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் கிங்ஸ்லி சி விக்கிரம சிங்க, இலங்கை செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் முயற்சிகளில் எயர் லங்கா ஒப்பந்தம் சிறந்த தொன்றாகும் என்று தெரிவித்தார்.

(இ-6-7)

# இம் மாதம் 28 ஆம் திகதிக்குப் பின் ரெலோ உறுப்பினர் பதவி ஏற்பர்

கொழும்பு, மே 21

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற ரெலோ உறுப்பினர்கள் 18 பேரும் இம்மாதம் 28-ம் திகதிக்குப் பின்னர் பதவி ஏற்பார்கள்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பில நடைபெற்ற ரெலோ அமைப்பின் பொதுக் குழுக்கூட்டத்தில் இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

உடனடியாக யுத்த நிறுத்தம், நிபந்தனை அற்ற அரசியல் பேச்சு வார்த்தைகள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் நீதியான அரசியல்தீர்வு நிரந்தர சமாதானம் ஆகிய கோரிக்கைகளை வற்புறுத்தி பெப்ரவரி 18 ஆம் திகதி தொடக்கம்ரெலோஅமைப்பு 100 நாள்களுக்கு அடையாள பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வந்தது.

இந்த 100 நாள் பகிஷ்கரிப்புக் காலம் இம்மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதனை அடுத்தே தெரிவு செய்யப்பட்ட 18 பேரும் பதவி ஏற்பது என்றுமுடிவாகி உள்ளது.

(உ)

ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 1937—11—26

மறைவு 1997—05—30

அமரர்

**நாகலிங்கம் ஆறுமுகம்**

(நெடுந்தீவு பல நோ. கூ. சங்க ஊழியர்)

பண்புடனே பழகி
கடமை கண்ணியம்
கட்டுப்பாடடுடன் கடமையாற்றிய
அமரர் நா. ஆறுமுகம் அவர்களுக்கு
எமது ஓராண்டு அஞ்சலிகள்!

தலைவர்,
பணிப்பாளர், ஊழியர்கள்.
நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்

(சி/3787)

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

**சப்பறத் திருவிழா**

22-05-1998 வெள்ளிக்கிழமை பி.ப. 5-30 மணிக்கு புதியதாக அமைக்கப் பெற்றுள்ள முப்பத்தொரு அடி உயர மின் தீபங்களினால் அலங்கரிக்கப்பெற்ற சப்பறத்தில் வாகனரூடராக விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் சிவனும் உமையும் வீதியுலாவரும் காட்சி இடம்பெறும்.

விசேட நாதஸ்வர தவில் கச்சேரி

நாதஸ்வர வித்துவான்
N. R. கோவிந்தசாமி புதல்வர்கள்
தவில் வித்துவான்
தெட்சணாமூர்த்தி, உதயசங்கர் குழுவினர்.

விழா உபயகாரர்:
திரு. த. குமார்,
இலட்சுமி விலாஸ், சுன்னாகம்.

(56136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

## வெற்றிடம்

### நிர்வாக உதவியாளர்

அலுவலக முகாமையிலும், கணக்கியலிலும் அனுபவம் வாய்ந்த, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியுள்ள, எமது சங்கப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணிக்கும் மனப்பாங்குடைய ஒருவர் தேவை.

**தகைமைகள்:**

கல்வி;- க. பொ. த (சா/த) அல்லது உயர்.
வயது:- 30 - 55 தொண்டுதியமாக 2,500/- உம், உணவும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்:- **10 - 06 - 98**

சோ. பத்மநாதன்,
செயலாளர்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி-3786)

---

# சபிண்டீகரண நினைவு அஞ்சலி

திருமதி

## உமையம்மை சிவசம்பு

(ஓ. பெ. ஆசிரியர், அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி)

தோற்றம்
**13-10-1914**

மறைவு
**06-05-1998**

''தாபக உறுப்பினராய் ஓங்கி
எமக்கு இல்லிடமும் தந்துதவி
சைவம் வளரப் பல்வகையில்
எமை ஊக்குவித்து உபசரித்து
வளர்த்தெடுத்த அம்மை உமையம்மை
பாதம் பணிந்தென்றும் தம்
ஆத்ம ஈடேற்றம் வேண்டிப்
பரமன் தாள் பணிகின்றோம்.''

தங்கள் பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரர்கள் முதலானோருடன் நாமும் இணைகின்றோம்.


திவ்ய சீவன சங்கம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(56088)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## கதிரவேலு கந்தையா

(இரத்தினம்)

மலர்வு
**24-07-1947**

உதிர்வு
**21-04-1998**

அன்பிற்கோர் அணையா விளக்காய் உதித்தஅன்புத் தெய்வமே! குலவிளக்காய்மிளிர்ந்து எமது நலம்காத்த தந்தையே! கலங்குமெங்கள் கண்களெல்லாம் குளமதுவாய்மாறி நீர் அலைமோதுதப்பா! பலரறிய முடியாது தானே அகன்றதுவே! ஒரு மாதம் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இல்லத்தில் இன்று (21-05-98) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி,

(56129)

---

# வலி-தெற்கில் 6,000 குடும்பங்கள்

# இன்னும் 5,000 ரூபா பெறவில்லை

சுன்னாகம், மே 21

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 6 ஆயிரம் குடும்பங்களுக்கு இன்னும் மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட 10 ஆயிரத்து 443 குடும்பங்கள் கடந்த இரு வருடங்களிலும் மீளக்குடியமர்ந்து உள்ளன.

இவர்களில் 7 ஆயிரத்து 527 குடும்பங்களுக்கு ஏற்கனவே மீளக் குடியமர்வு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2 ஆயிரத்து 916 நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கும், வலி. வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து இப்பகுதியில் தங்கியுள்ள 3 ஆயிரத்து 147 குடும்பங்களுக்கும் மேற்படி நிவாரணம் வழங்கப்படவில்லை.

இம்முறை மிகக் குறைந்தளவானோருக்கே 140 பேருக்கு [illegible]டும் நிவாரணம் வழங்கப்ப[illegible] உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை —

வன்னிப் பகுதியிலிருந்து வந்து புதிதாக மீளக்குடியமர்பவர்களின் எண்ணிக்கையும் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளதாகவும் — இதனால் மீளக்குடியமர்வு நிவாரணம் பெற வேண்டியோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

## சிறுவர் பாதுகாப்பு கருத்தரங்கு

சண்டிலிப்பாய், மே 21

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குட்பட்ட சிறுவர்களின் பராமரிப்பு ஆலோசனைக் கூட்டமொன்று பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதியன்று சிறுவர் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளுக்கான முழுநாள் கருத்தரங்கு ஒன்றை பிரதேச செயலகத்தில் நடாத்துவது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ஐ-135)

## வி. கழகங்கள் பதிவு

சுன்னாகம், மே 21

வலி. தெற்குப் பிரதேச செயலகத்தால் தடகளப் போட்டிகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களும் உடனடியாகத் தமது பதிவுகளைச் செய்து கொள்ளுமாறு செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் ஏ. எஸ். ஜெயப்பிரகாசம் கேட்டுள்ளார். (ஐ-27)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 21

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிஎதிர் வரும்24 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 1. 30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் நா. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராஜேந்திரன் கலந்து கொள்வார்.

இந்த மெய்வல்லுநர் போட்டி கடந்த 17 ஆம் [illegible] இருந்து ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் மூத்த உறுப்பினரும்
சபை மூப்பரும் ஆன

## அமரர் நா. தம்பிப்பிள்ளை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், அவரின் பிரிவால் துயருறும் மனைவி மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

''இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது.''

— எசாயா 9, 2

சபைப் போதகர் E. J. இராஜநாயகம் -
விசுவாசிகளும்.

ஏழாம் நாள் அட்வெண்டிஸ் திருச்சபை,
850, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(56134)

---

# 31 ஆம் நாள்

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

## திருமதி இரத்தினநாயகி சிவபாதசுந்தரம்

அன்பிற்குரிய எமது குடும்பத் தலைவி
திருமதி இரத்தினநாயகி சிவபாதசுந்தரம்

அவர்கள் 22 - 04 - 98 இல் சிவபதமெய்தியதையிட்டு நேரில் வந்தும், வேறு வழிகளில் தொடர்பு கொண்டும், அஞ்சலிகள் செய்தும், ஆத்ம ஈமக் கிரியைகளில் உதவிப் பங்களித்தும், ஆத்ம உணர்வுகளில் கலந்தும் கொண்ட அன்பர்கள், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கும் —

சோமபாலன் குடும்பத்தினர்,
அமரர் Dr. வசந்தநாதன் குடும்பத்தினர்,
சுந்தரேசன் குடும்பத்தினர்,
பத்மதேவி சிவானந்தசோதி குடும்பத்தினர்,
அருட்பதி, Dr. உமா சிவபாதசுந்தரம்.
ஆகியோர்.

22 - 05 - 98 வெள்ளிக்கிழமை அன்று வியாபாரி மூலை இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்தி நிகழ்விலும் அன்றைய மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி!

வியாபாரி மூலை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(56125)

---

# ஆண்டொன்றின் நினைவலைகள்

அன்னை மடியில்
19 — 04 — 1935



ஆண்டவன் அடியில்
31 — 05 — 1997

## அமரர் தில்லையம்பலம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், நயினாதீவு)

திதி: 21-05-1998

சொல்லாலும் செயலாலும் சூதேதும் அறியாதோய்
எல்லோரும் விரும்பிடவே இனிய பல கதை
சொல்லிடுவீர்
பொல்லாத விதியும்மை புவியிருந்து மீட்டதுவோ?
நல்லோர்கள் நீடுவாழ நானிலம் பொறுப்பதில்லை
சொல்லாமல் உமைக்கவர்ந்த 'பவ' ஆண்டும் பறந்து
செல்லாமல் சென்றதுவே சிந்தை கலங்குகின்றோம்
கல்வியிலும், கேள்வியிலும், கடமையிலும் நாமுயர
பல் காலும் உமைப்பணிந்து பாதமலர்
போற்றுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

11/7, சந்தான மாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(56119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா பிறவுண் ஒரு நாள் பேட்டுக்குஞ்சும், 60 நாள்கள் நிரம்பிய வயதுடைய குஞ்சும் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில்தொடர்பு கொள்ளவும். [சி/3779]

இறககுமதி செய்யப்பட்ட நாள் முதல் அரச அதிகாரியின் சொந்தப்பாவனையில் நிற்கும், தனிப்பெற்றோலில் ஓடும் சகலவளமும் நல்லநிலையிலுமுள்ள 2Sri 4009 – Minor – 1000 டாக்டரின் கார் விற்பனைக்கு உண்டு. சொந்தப் பாவனையாளர் விரும்பத்தக்கது. தொடர்பு: 209, பலாலி வீதி, கோண்டாவில் சந்தியடி. [56120]

### இலகு திருமண சேவை

40 வயது திருவோணம் செவ்வாய் 7 Holland இல் வேலை செய்பவருக்கு மணமகள் தேவை. Sponser உண்டு. சகல மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா 958/ ,8 K. K. S வீதி, நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம். (56137)

## சேவைநலம் பாராட்டு

யாழ்ப்பாணம், மே 21

சுன்னாகம் கிழக்கு பூதராயர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சி. சிவகடாட்சக் குருக்கள தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு கோயில் நிர்வாகிகள் அண்மையில் அவருக்கு சேவைநலம் பாராட்டுவிழா நடத்தியுள்ளனர்.

(ஐ-8)

## விளையாட்டுப் போட்டி

திருநெல்வேலி, மே 21

கொக்குவில் காந்திஜி பாலர் பராமரிப்பு நிலையத்தின் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமையன்று வண. பிதா ஜெறோம் போல் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபரும், எழுத்தாளருமான ந. சிவபாதம் (புத்தொளி) கலந்து கொள்வார்.

(ஐ-135)

## மணலாறில் தாக்குதல்

கொழும்பு மே 21

மணலாறு (வெலிஓயா) பகுதியில் படையினரின் முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் முன்தினம் காலை மேற்கொண்ட திடீர்த்தாக்குதலை பாதுகாப்புப் படையினர் முறியடித்து விட்டதாகவும்—


படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகள் சார்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

(இ-7)

இம்மாதத்திற்கான மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களும், வாராந்த புலமைப் பரிசில் வினாத் தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND - யாழ். நகர்.
(56079)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 23 — 05 — 1929

மறைவு 29 — 04 — 1998

திருமதி

### நவரத்தினசாமி கமலாவதி

கடந்த 29—04—98 இல் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் 21—05—98 வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மையாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், ஆறுதல் தந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| பிரான்ஸ் | ந. கமலநாதன் | மக்கள் |
| சுவிஸ் | ந. இன்பநாதன் | |
| | இ. கலையரசி | |
| | க. இராமச்சந்திரன் | மருமகன் |
| | இ. ஜெயந்தன் | பேரர் |
| | இ. தமயந்தி | |
| | இ. தனஞ்செயன் | |

மாதனை,
பருத்தித்துறை. (56135)

## ஓராண்டு பூர்த்தியும் நினைவஞ்சலியும்



அமரர்

### கந்தையா மாசிலாமணி

(7 ஆம் வட்டாரம், நயினாதீவு)

தோற்றம் 19 - 07 - 1931

மறைவு 18 - 05 - 1997

திதி:– 21 – 05 – 1998

பாசத்தின் பிறப்பிடமே குடும்பத்தின் ஒளிவிளக்கே
நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனதைய்யா
ஓராண்டு என்ன நூறு ஆண்டுகள் சென்றாலும் மாறாதையா
உங்கள் பசுமையான நினைவுகள்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினாதீவு நாகபூசணி அம்மனையும், பிடாரி அம்மனையும் வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

'சோதி அகம்',
7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (56083)

ஆங்கில/தமிழ் தட்டெழுத்தாளர் தேவை


யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள ஆங்கில/தமிழ் தட்டெழுத்தாளர்கள் உடன் தேவை.

தகைமையுடையோர் நற்சாட்சிப்பத்திரங்கள், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3789)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 — 02 — 1934

ஆண்டவன் அடியில் 21 — 04 — 1998

### அமரர் எஸ். எஸ். நடராஜா

(சங்கீத பூஷணம்)

திதி: 21 - 05 - 1998

அன்பொழுகும் உள்ளமுடன்
அரவணைத்து எமையெலாம்
இன்பமுறச் செய்த இசைமேதை
மன்பதையில்...........
வாழ்வாங்கு வாழ்ந்து
வளரீழச் சிதம்பரத்தின்
ஆழ்ந்தகன்ற பக்தியிலே
தோய்ந்தவனே . . ....
எம்மை யெலாம் ஏங்கவிட்டு
எங்கே நடந்தனையோ?
உம்மையே உள்ளுவோம் என்றும் ......
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

அன்னாரின் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

அல்லின்வீதி,
காரைநகர். (56130)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சோமசுந்தரம் கதிர்காமநாதன்

தோற்றம் 23 — 01 — 1937

மறைவு 21 — 04 — 1998

அன்பும் அறிவும் அகத்திருக்க
பண்பும் பரிவும் தனக்காக்கி
இன்னுரைகள் இதமாய் - எடுத்துரைத்து
நன்றுடனே நானிலத்தில் நாம்வாழ
என்றுமே இனித்திருந்த தெய்வமே!
ஆறாது துன்பம் தம் பிரிவால்
மாறாது துயரம். ஆனாலும் நெஞ்சம்
ஆத்ம சாந்திக்காய்த் துதிக்கும்.

புவனேஸ்வரி
(மனைவி)

'குணவாசா'
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (56062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரே குட்டை மட்டைகள்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் போரை, அரசாங்கத்தரப்பில் வழி நடத்தும் பொறுப்பு பிரதிஅமைச்சர் அனுருத்தவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான பிரதான விநியோகப் பாதையைத் திறப்பதற்கென்று ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றிஉறுதி'' இராணுவ நடவடிக்கை ஒரு வருடம் கடந்தும் வெற்றி பெறுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

இந்த இராணுவத் தாக்குதலை ஆரம்பித்த போது மூன்று மாதங்களில் அது பூர்த்தியாகி பாதை திறக்கப்பட்டுவிடும் என்று கால அட்டவணை விதித்தவர் அனுருத்த. அதன் பின்னர் பல அட்டவணைகள், அவகாசங்கள் விதித்தும், வகுத்தும் எதுவும் கைகூடவில்லை. அதன் பின்னர் ஒரு கட்டத்தில் போருக்குக் காலஅவகாசம்விதிக்க முடியாது என்றும் கூறியிருந்தார்.

இப்போதைய நிலையில் ''வெற்றி உறுதி'' கால எல்லை எதுவுமின்றிநீண்டு செல்லுமோ என்ற சந்தேகம் எல்லாத் தரப்புக்களிலும் தோன்றியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசித்துள்ளது. போரைச் சரியாக வழி நடத்தவில்லை. என்பதே பிரதி அமைச்சர் மீது சுமத்தப்படவுள்ள பிரதான குற்றச்சாட்டாகும்.

போரினால் நாட்டில் பேரழிவுகள் இடம் பெறுகின்றன. மக்கள், இராணுவத்தினர், விடுதலைப்புலிகள் என்று இந்நாட்டினர் உயிர்ப்பலியாகின்றார்கள். நாட்டின் நிதி வளத்தில் பெருமளவுகரைந்துகொண்டிருக்கின்றது. மொத்தத்தில் நாடு சீரழிகிறது.

அந்த வகையில் பிரதி அமைச்சர் தாமாகவே பொறுப்புள்ள தமது பதவியை விட்டு விலக வேண்டும். ஆனால் அமைச்சர் அவ்வாறு விலகுவதாக அறிவித்த போதிலும் அது வெறும் நாடகமாக முடிந்தது!

ஆகையால் ஐ.தே.கட்சியின் முடிவு பொருத்தமானதே.

எனினும் போரை நிறுத்துவதற்குக் கோருகின்ற ஒரு பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி சபையில் கொண்டு வந்தால் அது இன்னும் பெறுமதியானதாக, பயனுள்ளதாக அமைந்திருக்கும்.

அமைச்சர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை மட்டும் கொண்டு வருவது என்றமுடிவு போர் தொடர வேண்டும்; மக்கள் அழியட்டும்; நாடு சீரழியட்டும் என்ற நிலைப்பாட்டை— அரசின் நிலைப்பாட்டை— ஐ. தே. கட்சியும் ஆதரிக்கிறது என்பதாகிறது.

ஆளுங் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதற்கு இதுவும்ஒரு சான்றாகிறது!

# வீதிச் சோதனை நடவடிக்கைகள்

## வடமராட்சிப் பகுதியில் அதிகரிப்பு

வடமராட்சி, மே 21

வடமராட்சிப் பகுதியில் நேற்று முன் தினம் முதல் திடீர்ச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள இராணுவத்தினரின் வழமையான சோதனைச் சாவடிகளை விட பிரதான வீதிகள், சிறுவீதிகள் என்பனவற்றில் ஆங்காங்கே நின்ற படையினர் பொது மக்களை சோதனைசெய்ததைக் காண முடிந்தது.

இள வயதினர் மாத்திரமன்றி, ஏனைய வயதினரும் வழமைக்கு மாறாக நேற்று முன்தினம் சோதனையிடப்பட்டனர்.

குறிப்பாக நகரப்பகுதிக்குச் செல்லும் வீதிகளில் கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை —

பிரதான வீதிகளில் பஸ்கள் முன்பு நிறுத்தப்படாத இடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டு பயணிகளை இறக்கி சோதனை நடத்தப்பட்டது.

சில சோதனை நிலையங்களில் பஸ் வண்டிகளில் இருந்து வயது வேறுபாடு இன்றி முழுப் பயணிகளுமே இறக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை —

வடமராட்சிப் பகுதியில் முன்பு இரவு 9 மணிவரை நடமாடிய மக்கள் தற்போது இரவு 7. 30 மணியுடனேயே பெரும்பாலும் வீட்டில் முடங்கி விடுகின்றனர். 7. 30 மணிக்குப் பின்னர் வீதிகளில் மக்கள் நடமாட்டம் அருகி வரக் காணப்படுகிறது.

(ஐ-15-173-109)

## இலவச பண்ணிசை

கொழும்புத்துறை, மே 21

இணுவில் அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் நடைபெற்று வரும் அறநெறிப் பாடசாலையில் இலவச பண்ணிசை வகுப்பு பிரதி வியாழக்கிழமைகளில் மாலை 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை நடைபெற்று வருகிறது. (ஐ-30)

## பௌர்ணமி நாள் கலை நிகழ்ச்சி

குருநகர் மக்களின் கலை வளர்ச்சியை ஊக்குவிக்க குருநகர் கலை அரங்கில் மாதந்தோறும் பௌர்ணமி கலை நிகழ்ச்சியை நடத்த அனுமதி வழங்குமாறு யாழ். மாநகர சபையை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி கேட்டுள்ளது. (ஐ-51)

## பம்பாய் வெங்காய விதைகள் விநியோகம்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பம்பாய் வெங்காய விதைகளும், கரட், பீற்றூட், முள்ளங்கி, துபாய் பூசனி ஆகியவற்றின் விதைகளும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கமநலச்சேவை கேந்திரநிலையங்களிலும் கையிருப்பில் உள்ளதாகவும், விவசாயிகள் இவற்றை சகாய விலையில் பெற்றுப் பயனடைய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

திருநெல்வேலியிலுள்ளவிவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்திலும், சுன்னாகத்திலுள்ளவிவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்திலும் இந்த விதைகளை விவசாயிகள்பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். கமநலச்சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

(ஐ-135)

## நீர்கொழும்புச் சம்பவம்: 21 பேர் கைதாகினர்

கொழும்பு, மே 21

நீர்கொழும்பு ரயில்வே நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தோடு தொடர்புள்ளவர்கள் என்ற சந்கேகத்தின் பேரில் 21 பேர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் குண்டு வெடிப்போடு நேரடியாகவே தொடர்புள்ளவர்கள் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-9)

## கல்வி அதிகாரிகள் குழு பாடசாலைகளுக்கு விஜயம்

அச்சுவேலி மே 21

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள அதிகாரிகள் குழு பாடசாலைகளில் திடீர் விஜயம் செய்து மேற்பார்வை செய்து வருகின்றது.

கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு வடக்கு-கிழக்கு மாகாண அதிகாரிகள் குழு இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வலய மட்டத்திலான அதிகாரிகளைக் கொண்ட குழுக்களும் கோட்டமட்டத்திலான அதிகாரிகளைக் கொண்ட குழுக்களுமாக மூன்று மட்டங்களில் திடீர் மேற் பார்வைக் குழுக்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து மேற்பார்வையினைச் செய்து வருகின்றன.

(ஐ-11)

## கடுங் காற்றினால் வாழைகள் அழிவு

சுன்னாகம், மே 21

தற்போது வீசத் தொடங்கியுள்ள கடும் காற்றினால் சுன்னாகம் பகுதியில் பல வாழை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் சந்தையில் வாழைப்பழத்தின் விலை மேலும் குறைந்துள்ளது.

காற்றின் காரணமாக, பப்பாசி மரங்களும் முறிந்துள்ளன. பெருமளவில் மாங்காய்களும் உதிர்ந்து விழுந்துள்ளன. (ஐ-27)

## தனிச் சிங்களத்தில் அமைச்சு சுற்றறிக்கை

சுன்னாகம், மே 21

கல்வியமைச்சினால் யாழ்ப்பாண கல்விவலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரு சுற்றறிக்கைகள் சிங்கள மொழியில் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிலுநர் ஆசிரியர்களின் சம்பளத்தை ரூபா 2ஆயிரத்து 500 ஆல் உயர்த்துவது தொடர்பான சுற்றறிக்கையும் —

1992 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களை 3 — II தரத்துக்கு உயர்த்துவது பற்றிய சுற்றறிக்கையுமே — சிங்கள மொழியில் அமைந்துள்ளன.

தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள போதும், திணைக்களங்களில் தனிச் சிங்களச் சுற்றறிக்கைகள் விடுக்கப்படுவது தொடர்ந்தும் நடைபெறுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## கலாசார நிகழ்வுகளை வெளிக்கொணரபுதியபிரிவு

வடக்கு—கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு ''ஒலி ஒளிப்படப் பிரிவு'' ஒன்றை புதிதாக ஆரம்பித்துள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்வேறு இனத்தவரின் மறைந்து போய்க் கொண்டிருக்கும் கலாசாரப் பாரம்பரிய நிகழ்வுகளைப் பேணிப்பாதுகாத்தல், மெருகூட்டல், புதிய பரிமாணத்தோடு வெளிக் கொணரல் ஆகிய செயற் பாடுகளை இந்த ஒலி ஒளிப்படப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

ஒலி ஒளிப்படப் பகுதிக்கு பொறுப்பான அலுவலராக எஸ். டொமினிக் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-11)

## கிராமிய வங்கிகளின் சமாச உபவிதி திருத்தம்

அரியாலை, மே 21

யாழ். குடாநாட்டு கூட்டுறவு கிராமிய வங்கிகள் சமாசத்தின் உபவிதிகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஆலோசனைக்கு ஏற்ப திருத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உபவிதிகள் திருத்தம் செய்யப்பட்டன.

இத்திருத்தத்தின்படி இச் சமாசத்தில் கிராமிய வங்கிகளைக் கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே அங்கத்தவர்களாக முடியும். இரண்டாம்படி சங்கங்களும் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள் இணை அங்கத்தவர்களாகவும் சேர்ந்து கொள்ள முடியும்.

இந்தப் புதிய உபவிதியின்படி கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவர், உப தலைவர் மற்றும் இயக்குநர் சபைத் தெரிவுகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றன.

இந்தப் பொதுக் கூட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-17)

## வலி. தெற்கில் 140 குடும்பங்களுக்கு ரூ. 5,000 கொடுப்பனவு

சுன்னாகம், மே 21

வலி. தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள (உடுவில்) மேலும் 140 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவுக்காக ஏழு இலட்ச ரூபா நிதி கிடைத்துள்ளதாகவும், இதனை ஆறு கிராமசேவகர் பிரிவுகளுக்குப் பகிர்ந்து வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் —

செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் ஏ. எஸ். ஜெயப்பிரகாசம் தெரிவித்தார்.

(ஐ-27)

### நாளை

வைகாசி - 08

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி

முற்பகல் 11.01 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

காலை 6.53 வரை

ரேவதிவைகறை 5.14வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 05.52 -07.22

ராகுகாலம்: 10.22 -11.52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்க்கையின் சுகங்களையும், துக்கங்களையும் ஒரே மாதிரியாகப் பார்க்கின்றவர்கள் யாரோ அவர்கள்தான் சிறந்த முறையில் கல்வி பயின்றவர்கள் என்பது என் இனிய கருத்து,

குரு

### சாயிசிந்தனை

தியாகம் என்பது என்ன? உடலைத் துறப்பதல்ல தியாகம்; காட்டுக்குச் செல்வதல்ல; வீடு, மனைவி, மக்களை விட்டுச் செல்வதுமல்ல; ராகம், துவேஷம், அகங்காரம் (விருப்பு, வெறுப்பு, நான் என்ற ஆணவம்) இவற்றைத் துறத்தலே தியாகம். மனிதத் தன்மை இந்த மூன்று தன்மைகளால் மூடப்பட்டிருக்கிறது. கண்ணில் புரை விழுந்திருக்கிறது. கண் பார்வை மங்கி விட்டது. அதற்காகப் புதிய கண் தேடவேண்டியதில்லை. புரையை அகற்றினால் போதும். அதுபோல ராகம், துவேஷம், அசூயை ஆகிய இத்திரைகள் இதயத்தை மூடியுள்ளன. இம்மூன்று திரைகளையும் விலக்குவதே தியாகம். சொத்துகளைத் துறப்பதல்ல. இத்துர்க்குணங்களை, கெட்ட இயல்புகளை விடுத்த பின்பு ஆத்ம இயல்பு தானாகவே கைவரப்பெறும். அதைப் பெறுவதற்கு உனக்கு முழு உரிமை உண்டு.

(ஆதாரம்:- பிரசாந்தியில் அம்ருதவர்ஷினி பாகம் 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடி அபாயம் பற்றி

# தொடர் கருத்தரங்குகள்

## சமூக மருத்துவத்துறை ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 21

மிதிவெடி அபாயம் தொடர்பாகவும், மிதி வெடி அபாயங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவான தொடர் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாடு முழுவதும் தற்போது மிதிவெடியினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனைக் கருத்திற் கொண்டே இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். சிவராஜா தெரிவித்தார்.

இதுவரை குடியேறாத பல பகுதிகளில் மக்கள் இப்போது மீளக்குடியேற ஆரம்பித்துள்ளனர். இதனால் இப்பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளால் பலர் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் பயிர் செய்யப்படாது இருந்த பல காணிகளிலும் விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இவர்களும் மிதிவெடி அபாயங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு மிதிவெடி அபாயங்களை எதிர்கொள்கின்ற பலர் அபாயம் தொடர்பான பூரணவிளக்கத்தைப் பெற்றிருப்பதில்லை. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டே சமூக மருத்துவத்துறையினர் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளனர்.

கிராமசேவையாளர்கள், மருத்துவ மாதுகள், சுகாதார வைத்திய ஊழியர்கள் போன்றோருக்கு இந்தக் கருத்தரங்குகள் மூலம் மிதிவெடி தொடர்பாக விளக்கமளிக்கப்பட உள்ளது.

இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள இந்தக் கருத்தரங்குகளில் கட்டங் கட்டமாக 40 பேர் வரை பங்கு பற்றுவர். இவர்களுக்கு மிதிவெடிகள் தொடர்பாக விளக்கமளிப்பதன் மூலம் அக்கருத்துக்கள் பொதுமக்களை விரைவாகச் சென்றடையும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் -

இக் கருத்தரங்குகளில் விளக்கமளிப்பதற்காக கையேடுகளும் வரைபடங்களும் அச்சிடப்பட்டுள்ளதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# மிதிவெடிகளில் சிக்கியோரை தனித்தனியாகச் சந்தித்து ஆய்வு

## சமூகப் பாதிப்பை அறிய முயற்சி

யாழ்ப்பாணம், மே 21

மிதிவெடிகள், கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டோர் அங்கவீனமடைந்தோரின் நிலைமை குறித்து ஆய்வு ஒன்றை யாழ். மருத்துவபீட சமூக மருத்துவத் துறையினர் ஆரம்பித்துள்ளார்கள்.

யாழ். குடாநாடு முழுவதிலும் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மிதிவெடிகளாலும், கண்ணிவெடிகளினாலும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஆஸ்பத்திரியில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. ஆனால் சிகிச்சையின் பின்னர் அவர்களின் நிலை என்ன என்பது தெரியாமல் போய் விடுகின்றது.

எனவே சிகிச்சை பெற்று அவர்கள் வீட்டுக்குச் சென்ற பின்னர் அவர்களின் வாழ்க்கை நிலை தொடர்பாகவும், சமூகத்தில் அவர்கள் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகள், சவால்கள் தொடர்பாகவுமே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த ஆய்வுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட படிவங்கள் மூலம் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன. (ஐ-9)

# 450 சைக்கிள்கள் கப்பலில் வந்தன

அரியாலை, மே 21

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவு சமாசத்திற்கு கொழும்பில் இருந்து ''ஹண்டி'' கப்பலில் 450 சைக்கிள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த சைக்கிள்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளன. (ஐ-17)

# உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துக்கு ஜெனரேட்டர்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்துக்கு புதிய ஜெனரேட்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் மாணவர்களின் கல்விக்காக புதிதாக கொழும்பில் இருந்து கணனிகள் எடுத்து வரப்பட்டிருந்தன. ஆனால் அந்தக் கணனிகளைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய ஜெனரேட்டர் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

இது தொடர்பாக உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவன மாணவர்கள் அண்மையில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து விளக்கியிருந்தனர்.

இதனையடுத்து அவர் புதிய ஜெனரேட்டர் ஒன்றை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்தார்.

ஜெனரேட்டர் கிடைத்ததை அடுத்து உயர் தொழில் நுட்ப மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன (ஐ 9)

# சுன்னாகம் பகுதிக்கு தொலைபேசி வரவில்லை

## பொதுமக்கள் விசனம்

சுன்னாகம், மே 21

சுன்னாகம் பகுதிக்குத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் பகுதியிலிருந்து 25 பேர் தொலைபேசி இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களில்மூவர் பணம் செலுத்தியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் வர்த்தக கேந்திர பகுதியான சுன்னாகம் நகருக்கு தொலைபேசி வசதிகள் இன்னமும் கிடைக்கவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

சுன்னாகம் மக்கள் தற்போது யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு வந்தே தொலைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர். (ஐ-27)

''முன்னேறிப் பாய்தலால்'' சேதமடைந்த

# இரு ஆலயங்களுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

வட்டுக்கோட்டை, மே 21

1995 ஆம் ஆண்டு ''முன்னேறிப்பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின்போது விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி பெருமளவில் சேதமடைந்த அராலி வண்ணபுரம் சிவன்கோயில், வட்டுக்கோட்டை அடைக்கலம் கோட்டம்கந்தசாமி கோயில் ஆகியவற்றுக்கு தலா இரண்டரைஇலட்ச ரூபா நஷ்டஈடு வழங்கப்பட உள்ளன.

இவ்வாண்டு நிதிஒதுக்கீட்டிலிருந்து இந் நிதியுதவிக்கான மதிப்பீட்டு வேலைகளை பிரதேச செயலக திட்டமிடல் கிளை மேற்கொண்டு வருகின்றது. (ஐ-12)

சாவகச்சேரி நிலையத்தில்

# தொடர்பியலுக்கான ஆங்கிலப் பாடநெறி

யாழ்ப்பாணம், மே 21

அண்மையில் சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்பட்ட புறநிலைப் படிப்புகள் அலகின் இரண்டாவது பிரிவினருக்கான தொடர்பியலுக்கான ஆங்கிலப் பாடநெறி கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

சாவகச்சேரியில் புறநிலைப் படிப்புகள் அலகு ஆரம்பிக்கப்பட்டது முதல் அங்கு தொடர்பியலுக்கான ஆங்கிலப் பாடநெறி மட்டுமே நடைபெற்று வருகின்றது. முதல் பிரிவினரின் பாடநெறி பூர்த்தியானதையடுத்தே புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு வேறும் பல கற்கை நெறிகளை ஆரம்பிக்குமாறு சாவகச்சேரிப்பிரதேச மாணவர்கள் பலர் கோரி வருகின்றனர். இதனையடுத்து விரைவில் அலுவலக முகாமைத்துவம் என்ற கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ-9)

### அமெரிக்காவின்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

யாக முன்னேறி இருப்பதால் இதன் நடவடிக்கைகளை வெளிநாடுகள் அறியவில்லை.

இதனால் அணு குண்டுச் சோதனை முடிந்து 4 மணித்தியாலங்களுக்குப் பின்னர் பிரதமர் வாஜ்பாய் அறிவித்த போதுதான் இதுபற்றி உலகமே தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் குண்டு வெடிப்புக்கு 6 மணிநேரம் முன்பு சீ. ஐ. ஏக்கு அது குறித்து தகவல் தெரிய வந்ததாகவும் ஆனால் அது பற்றி உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை என்றும் அமெரிக்கப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

இரவு நேரமாக இருத்ததனால் அந்தத் தகவலை அதிபர் கிளின்ரனுக்கு தெரிவிக்க யாரும் விரும்பவில்லை. இதனால் பிரதமர் வாஜ்பாயின் பேட்டி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான போதுதான் அவர்களால் அணு குண்டுச் சோதனை குறித்து அறிய முடிந்ததாக அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஐ-6-10)

# கணக்காளர் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை ஜூன் மாதம் 6ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் கொழும்பில் நடைபெற்று வந்த இப்பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-5)


# வட பிராந்திய மக்கள் வங்கியின்

ஆதரவுடன்

யா/மத்திய கல்லூரி சதுரங்கக்கழகம்

நடத்தும்

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான

## சதுரங்கச் சுற்றுப் போட்டி - 1998

(CHESS COMPITITION)

தனிப் போட்டியாளர்களுக்கானது

1) மேற்படி போட்டி 10, 12, 14, 16, 18, 20 ஆகிய வயதெல்லைகளின் கீழ் 6 பிரிவுகளாக நடத்தப்படும். (30 - 05 - 98 அன்று வயது கணிக்கப்படுகிறது) ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனி நடத்தப்படும்.

2) ஒரு பாடசாலை, ஒவ்வொரு வயதுப் பிரிவின் கீழும் மூன்று போட்டியாளர்களை அனுப்ப முடியும். [ ஆண், பெண் போட்டியாளர்கள் தனித்தனியாக]

3) விண்ணப்பத்தில் போட்டியாளரின் முழுப்பெயர், வயதுப் பிரிவு, பிறந்த திகதி, வகுப்பு போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுப் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

4) போட்டிகள் 06-06-98, 07-06-98, 09-06-98 ஆகிய தினங்களில் யாழ் மத்திய கல்லூரியில் காலை 8.30 -க்கு ஆரம்பமாகும்.

5) போட்டிகள் யாவும் உலக சதுரங்க சம்மேளனத்தினதும், (FIde) இலங்கை சதுரங்க சம்மேளனத்தினதும் (Sicf) விதிமுறைகளுக்கமைய சுவிஸ் முறையில் (Swiss System) நடத்தப்படும்.

6) விண்ணப்பங்கள் தபாலிலோ அல்லது நேரிலோ ''அதிபர் யா/ மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரியிட்டு 30-05-98 இற்கு முன்னதாகக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (விண்ணப்பத்தின் கடித உறையின் மேல் மூலையில் சதுரங்கச் சுற்றுப்போட்டி எனக் குறிப்பிடவும்,)

மக்கள் வங்கி, பிராந்திய விளையாட்டுக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(56143)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ். இலக்கிய வட்டத்தின் மூத்த உறுப்பினரும் மறுமலர்ச்சி இலக்கிய எழுத்தாளருமான அமரர் சு. இராசநாயகத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்துக்கு கல்வயல் வே. குமாரசாமி தலைமை வகிப்பார், சொக்கன், சு. வே. வரதர், செம்பியன் செல்வன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவர். (உ)

# மரண அறிவித்தல்கள்

## கைலாசப்பிள்ளை திசைவீரசிங்கம் J. P. (செட்டியார்)

[ஓய்வுபெற்ற வைத்திய ஆய்வுகூடப் பரிசோதகர் (M.L.T.)]

தெல்லிப்பழை கிழக்கு ''வளர்பிறை''யைச் சேர்ந்த கைலாசப்பிள்ளை திசைவீரசிங்கம் J P. (ஓய்வுபெற்ற வைத்திய ஆய்வுகூடப் பரிசோதகர் (M. L. T.) 20 — 05 — 1998 நேற்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை பொன்னம்மா ஆகியோரின் ஏக புதல்வரும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சௌபாக்கியம், முத்தம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சின்னத்துரை (லீலா குறூப்), காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் பெற்றோல் நிலையப் பொறுப்பாளர்), தர்மலிங்கம் (வைத்தியசாலை கணக்காளர்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயலக்ஷ்மி, சுகிர்தலக்ஷ்மி, தவலக்ஷ்மி, தவராஜசிங்கம், கிருபாலக்ஷ்மி, கமலவேணி, திருக்கைலாயவாசன், யோகலக்ஷ்மி, தவக்குமார், லோகநாதன், குகதாஸ், சுவேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகேசு (செல்வம் ஸ்ரோர்ஸ் K. K. S), குணராசா (கனகலிங்கம்பிள்ளை அன்சன்ஸ்), செல்வவிநாயகம், ரேவதி, லோகநாதன் (லீலா குறூப்), தனபாலா J. P. (லீலா குறூப்), வக்சலா, பாலசுப்பிரமணியம், சித்ரா, ஜீவராணி, உமாகாந்தா, உகிநா ஆகியோரின் மாமனாரும், முருகதாஸ் – பவானி, சதீஸ்குமார், அபிராமிச் செல்வி – தர்மராஜா, திபாகரன், ஜெயந்தினி, சிவானந்தராசா, செந்தில்ராசா, தயா, சிந்துஜா – கண்ணன், சசீஸ்தரன், உதயணன், சர்சினி, பிரணவன், தர்ஷன், டினொதன், டிலக்ஷன், விஜய்நாத், வாசினி, விநோத், ருக்ஷியன், டெனோஷியன், நிரோஷியன், ஆர்த்திக்கா, அஞ்சுகா, டாணிக்கா, ஹிமயந்தி, சத்யஜித், குகர்ஷா, வைஷிகா, அஷ்வினி, சுரேக்கா ஆகியோரின் பேரனும் தர்மிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 64, மெசெஞ்சர் வீதி, கொழும்பு —12 இல்லத்தில் இருந்து 23 — 05 — 1998 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 4.30 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறவுள்ளது என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
லோகநாதன்
(மகன்)

(சி/3791)

## திருமதி சிவகுரு சிவபாக்கியம் (தவமணி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு சிவபாக்கியம் 20 – 05 – 1998 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் கற்பகம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கற்பகம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும், சிவ்சோதி, பத்மாவதி (Oman), கனகாம்பிகை, தணிகாசலம் (France), மகேந்திரராஜா (களஞ்சியப் பொறுப்பாளர், வர்த்தகத் திணைக்களம்), பத்மநாதன் (France), தில்லைநாதன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), பவானி (Italy), கருணாகரன் (France), கெங்காதரன் (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சாம்பசிவம், கனகரெட்ணம் (Oman), இராசநாயகம் (Swiss), ஜெகதீஸ்வரி (France), தயாளபூபதி, பாலசிவகாமிஅம்பாள் (France), யோகேஸ்வரி, மகேஸ்வரன் (Italy), புஸ்பலதா (France), காயத்திரி (France) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தி (Swiss), காலஞ்சென்ற பரமகுரு, காந்தினி, தாரணி (பல்கலைக்கழகம்), தயாளன், மனோஜ்குமார் (Norway), மனோஜினி (Norway), பிரதீபன், பார்த்தீபன், காயத்திரி, அபிராமி, அகிலன், மாதங்கி, லவதேகி, சேயோன், மயிலோன், திவ்வியா, சரணியா, மேனகா, மயூரிகா, கஜன், கஸ்தூரி, சிறீஸ்கந்தராஜா (Swiss), ராஜி (Norway), சிறிகாந்தன் (Norway) ஆகியோரின் பேர்த்தியும், சயோதன், சாகித்தியன், ஆரபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21–5–98) வியாழக்கிழமை காலை 10–00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. மகேந்திரராசா (மகன்)
(களஞ்சியப் பொறுப்பாளர், வர்த்தகத் திணைக்களம்)
சி. தில்லைநாதன் (மகன்)
(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்)

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(56140)

# சமய நிகழ்வில்

யாழ்ப்பாணம், மே 21

கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலய திருவிழா நவநாள்கள் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பெருவிழாத் திருப்பலியுடன் நவநாள் உற்சவம் நிறைவடையும்.

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஏகாதசி விரதம், விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். தொடர்ந்து சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

தெல்லிப்பளை கருணைமிகு காசிவிநாயகர் தேவஸ்தான இலட்சார்ச்சனை நாளை முதல் மூன்று நாள்களுக்கு தொடர்ந்து நடைபெறும். (ஐ–15)

# பரிசளிப்பு விழா

வலி–வ...க்கு, மே 21

மல்லாகம் ...காவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் மா. நாகேந்திரசீலன் தலைமையில் வித்தியாலயத்தில் நடைபெறும்,

யாழ். கல்வித்திணைக்கள கட்டடப் பொறியியலாளர் க. சிவபாலன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. சிவமகாராசா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர் (உ-86)

## யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள் 1996/1997

முதற் கலைத்தேர்வு – 1997
முதல் வர்த்தகத்தேர்வு 1997

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் ஜூலை மாதப் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன.

விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூ. 15/– இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

வவுனியா வளாகத்தில் பரீட்சை எழுத விரும்புவோர் அங்கு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வளாகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இந்த விண்ணப்பங்கள் யாவும் 30–06–1998 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

— பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(சி/3790)

# கிணற்றில் வீழ்ந்த அண்ணன் - தம்பி பலி!

வவுனியா, மே 21

பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்த — ஒரே குடும்பத்தைச் சேர்ந்த — இரு பிள்ளைகள் பரிதாபகரமாக மரணமான சம்பவம் வற்றாப்பளைக் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இக்கிராமத்தில் வசிக்கும் தனபாலசிங்கம் என்பவரின் பிள்ளைகளான பிரதீபன் (வயது 7), பிருந்தாபன் (வயது 5) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் இருவரும் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

# மெய்வன்மைப் போட்டிகள்

வட்டுக்கோட்டை, மே 21

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அராலி நிலாவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி சி. சிவபாலன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சங்கானை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திருமதி த. பரமேஸ்வரியம்மா, அராலிமத்தி கிராம உத்தியோகத்தர் வி. சுகதேவன், அராலி மேற்கு கிராம உத்தியோகத்தர் சி. சிங்கராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-12)

★ ★ ★

நவக்கிரி அ. மி. த. க பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி கொத்தணி அதிபர் வே. சந்திரசேகரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேசச் செயலக கணக்காளர் ச. குகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற இருந்த இவ்விளையாட்டுப்போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [ஐ–8]

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆரம்ப பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 3-00மணிக்கு கனிஷ்ட பிரிவு அதிபர் திருமதி சி. சிவஞானம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசனும், சிறப்பு விருந்தினராக கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கயிலைநாதனும் கலந்து கொள்வர். (உ-117)

★ ★ ★

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும் பளை மத்திய கல்லூரி மைதானத்தில் கோட்டக் கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும். (உ–117)

★ ★ ★

வயாவிளான் குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை காலை 9-00 மணிக்கு பாடசாலை அதிபர் செ. கந்தசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

தெல்லிப்பளை பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ–3)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். கல்வி வலயம் ஒன்று, கல்வி வலயம் இரண்டு பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் உப-மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் இன்று காலை 8 மணி தொடக்கமும் பின்னர் பிற்பகல் 3 மணி தொடக்கமும் யாழ். மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்,

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:

காலை

★ 17 வயதுப் பிரிவு—மூன்றாம் இடத்துக்கான போட்டி — தேவரையாளி இந்து எதிர் யாழ். இந்து.

★ 19 வயது பிரிவு—மூன்றாம் இடத்துக்கான போட்டி — சாவகச்சேரி இந்து எதிர் யாழ். மத்திய கல்லூரி.

பிற்பகல்

★ 17 வயது — முதலாம் இடத்துக்கான போட்டி — யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் ம. வி. எதிர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

★ 19 வயது — முதலாம் இடத்துக்கான போட்டி — உடுப்பிட்டி அ. மி. கல்லூரி எதிர் நெல்லியடி ம. ம. வித்தியாலயம். (உ-3)

# நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 21

எதிர்வரும் 27 ஆம் திகதி காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் முன்கூட்டியே 26 ஆம் திகதி புறப்படவிருப்பதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே — 27 ஆம் திகதி கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்த சகல நோயாளர்களையும் 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். வைத்தியசாலையில் சமுகமளிக்கவேண்டும் என்று யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ–3)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த
பாதுகாப்பு உத்தியோகத்தர்
திரு. சி. தில்லைநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சிவகுரு சிவபாக்கியம்
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாதுகாப்பு
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பாதுகாப்பு திணைக்களம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(56145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கூட்டுறவுச் சபை அதிகாரிகள் கொழும்பில் அமைச்சரைச் சந்திப்பர்

திருநெல்வேலி மே 21

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பிலுள்ள சபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ. கனகசபாபதி மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வரார்கள்.

யாழ். கூட்டுறவுச் சபைத் தலைவரும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் கொழும்பில் தங்கியிருக்கும் வேளையில் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் டி.பி. விக்கிரமசிங்கா, கூட்டுறவு ஆணையாளர் எம். ஜி. ஹெட்டியாராச்சி ஆகியோரை நேரில் சந்தித்து யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ள யாழ். கடற்கரை வீதியிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை புனரமைப்புச் செய்வது பற்றியும், கடந்த கால வன்செயல்களின்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் மற்றும் இழப்புகளுக்கும் நஷ்ட ஈட்டினை பெறுவது பற்றியும் அமைச்சருடனும், கூட்டுறவு ஆணையாளருடனும் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## புகையிலைச் செய்கை மழையினால் பாதிப்பு

வடமராட்சி, மே 21

அண்மையில் பெய்த பெருமழையினால் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளின் புகையிலை பெருமளவில் பழுதடைந்து விட்டன.

புகையிலையை அறுவடை செய்த விவசாயிகள் அதனை உலர்த்துவதற்காக வெயிலில் போட்டிருந்தனர்.

கடும் மழையினால் இப் புகையிலை முழுவதும் நனைந்து அழுகிப் போய் விட்டன. இதனால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் புகையிலை விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(உ-173)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கை

வடமராட்சி, மே 21

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பம்பாய் வெங்காயம் பயிரிடுவதற்கென ஒரு தொகுதி விதை பம்பாய் வெங்காயம் புலோலி கமநல சேவை நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இப் பிரதேசத்திலுள்ள — பம்பாய் வெங்காயப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற இடங்களான செம்பியன் பற்று, நாகர் கோயில், அம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இந்த விதை வெங்காயம் பங்கிட்டு வழங்கப்படும் என புலோலி அம்பன் கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

(உ-173)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்

**குமாரசுவாமி சர்வானந்தன்**

(முன்னாள் மாணவ தலைவன், சா/ ஹிபேர்க் கல்லூரி)

மலர்வு; 10 - 04 - 1964 உதிர்வு: 21 - 05 - 1986

கருவினில் உதித்த மகனே!
காரிருளாய் - நீ மறைந்தாலும்
வட்டநிலா
வலம் வரும் போதெல்லாம்
காண்போம் உன் எழிற்கோலம்
நிஜத்தினில் நின்ற மகனே!
நின் நிஜ உருவம் மறைந்தாலும்
நிழலிற் காண்போம் உன் எழிற் கோலம்
அன்பினில் நிறைந்த மகனே!
ஆண்டுகள் பல உருண்டாலும்
கணத்தில் தோன்றும்
நினைவில் காண்போம் உன் எழிற்கோலம்!

ஓம் சாந்தி!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

5/1 புகையிரத வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(56132)

### யாழ். மேயர்…

(முதலாம் பக்கத் தொடர்)

அறிக்கை விடுவதன் மூலம் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும்.

— இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.

(உ-3)

### சரோஜினி..

(முதலாம் பக்கத் தொடர்)

இறுதிஅஞ்சலி செலுத்தினர்.

அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், அமைச்சர் அலவி மௌலானா, ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் நிலான் பெரேரா, சர்வோதய அமைப்புத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தின உட்படப் பலர் உரையாற்றினர்.

இறுதிக்கிரியைகள் நடைபெற்றபோது அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய பொலீஸார் நிறுத்தப் பட்டிருந்தனர். (உ-3-6-21)

### மினி முகாம்…

(முதலாம் பக்கத் தொடர்)

தமது தரப்பில் இழப்புக்கள் ஏதும் இல்லை என்றும்— ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலில் ரி56-2 ரகத் துப்பாக்கிகள் நான்கு உட்படப் பல ஆயுத தளபாடங்களைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் 'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது. (உ-2)

### பெர்னாண்டஸின்…

(முதலாம் பக்கத் தொடர்)

தாவது:-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட— விடுதலைப் புலிகள் உட்பட —26 பேருக்குமாக மேன்முறையீட்டு வழக்கைத் தாக்கல் செய்வதற்குத் தேவையான நிதியைச் சேகரிக்கும் குழுவுக்கு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தொடர்ந்தும் தலைமை வகிக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளரான பழ. நெடுமாறன் தாம் அண்மையில் ஜோர்ஜ் பெர்னாண்டஸை சந்தித்துப் பேசியது குறித்து சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் தாம் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாகவும் —

தம் பதவி பறிபோனாலும் அந்த ஆதரவைத் தாம் தொடரப் போவதாகவும் —

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தம்மிடம் கூறியதாக நெடுமாறன் அக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சென்னை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. (உ-6)

## பளை பாடசாலைகள் அபிவிருத்திக்கு பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி. மே 21

பளைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்கெனப் பத்து லட்சம் ரூபாவைக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிதியில் வேம்பொடுகேணி சீ. சீ. த. க. பாடசாலையில் வகுப்பறைத் தொகுதி நிர்மாணிக்க ஐந்து லட்சம் ரூபாவும், சேரன் பற்று கணேசா வித்தியாலயம், தர்மங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதமும், புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை திருத்த வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் தளபாடங்கள் கொள்வனவு செய்ய ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கோட்டக்கல்வி அலுவலர் அ. கயிலாய பிள்ளை தெரிவித்தார்.

பளைக் கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்கென கடந்த இரு வருடங்களிலும் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## களுத்துறையில் விமான நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு

களுத்துறை மாவட்டத்தில் விமான நிலையமொன்று அமைப்பது குறித்து அரசு எடுத்துள்ள தீர்மானத்திற்குப் பொதுமக்களிடமிருந்து பலத்த கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் மத்துகம பிரதேச வாசிகள் சுமார் பத்தாயிரம் பேர் கண்டன ஊர்வலமொன்றை நடத்தினார்கள்.

நானூறு ஏக்கர் நிலம் இதற்காகச் சுவீகரிக்கப்படவுள்ளது. சுமார் ஆயிரம் குடும்பங்கள் வரை வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பிரதி சபை முதல்வர் அனில் முனசிங்கவின் வேண்டுகோளின் பிரகாரம் இவ்விமான நிலையம் அமையவிருந்தது.

சென்னை உட்படச் சில சார்க் நாடுகளில் இருந்து இவ்விமானநிலையம் ஊடாக விமானசேவை நடத்துவதற்குத் திட்டமிடப் பட்டிருந்தது.

நேற்று முன்தினம் கண்டன ஊர்வலத்தின் முடிவில் அங்கு சமுகமளித்திருந்த அனில் முனசிங்க பொதுமக்கள் மத்தியில் வாக்குறுதி ஒன்று அளித்தார்.

இதனையடுத்து மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (உ-21)

### அவசரகால…

(முதலாம் பக்கத் தொடர்)

போராட்டம் ஒன்றுக்கு முஸ்தீபு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கில் உள்ள சகல உள்ளூராட்சிச்சபைகள் ஊடாக அடுத்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து மூன்று நாள்களுக்கு இப் போராட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான முன் முயற்சிகளை திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் சூரியமூர்த்தி மேற்கொண்டுள்ளார். (உ-3)

### தப்பியோடிய…

(முதலாம் பக்கத் தொடர்)

றும்—

தவறும் பட்சத்தில் நள்ளிரவில் இருந்து மீண்டும் கைது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும்—

பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தப்பியோடிய படையினருக்கு அண்மையில் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலப்பகுதியில் 5 ஆயிரத்து 892 படையினர் மீண்டும் படையில் இணைந்துள்ளதாகவும்—

ஆயிரத்து 768 படையினர் விசேட நடவடிக்கைகள் மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6-21)

### முல்லைத்தீவில்..

(முதலாம் பக்கத் தொடர்)

செயன்முறை விளக்கத்துக்கு காலஞ்சென்ற லறி விஜயரட்னாவின் வாகனமே பயன்படுத்தப்பட்டது.

கொலை நடந்த விதம் பற்றி விளக்கிய படையினர் கொலையாளி தளபதியின் வாகனத்தை நெருங்கிச் சில மீற்றர் தூரத்தில் வைத்து தற்கொலைத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்தனர்.

கொலையாளி வயிற்றில் கட்டியிருந்தகுண்டு வெடித்தபோது சிறிய தோட்டாக்கள் சிதறி வெடித்தனஅதன் காரணமாக அவ்விடத்தில் வீதியில் சிறு சிறு குழிகள் ஏற்பட்டன என்றும் படையினர் தமது விளக்கத்தில் குறிப்பிட்டனர்.

இந்தப் படு கொலையை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக வடமராட்சியின் புதிய இராணுவத் தளபதி கேணல் சனத் கருணாரத்தின தெரிவித்தார். (உ-6)

## சுட்டுக்கொலை

திருகோணமலை மாவட்டம் மூதூரை அடுத்துள்ள பாலத்தோப்பூர் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு சின்னவன் கனகரத்தினம் என்ற பொதுமகன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

படையினருக்குத் தகவல் கொடுத்தார் என்ற காரணத்தால் இவருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்)

நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நகராட்சி மன்ற உப-தலைவர் கா.லோகேஸ்வரன் தலைமையில் நகராட்சிமன்ற உறுப்பினர்களான எஸ். நந்தகுமார், பி. ஞானப்பிரகாசம், எஸ். ரவிராஜ், எஸ். ரூபராஜ் ஆகியோரும், எதிர்க்கட்சி ஈ. பி. டி. பி. உறுப்பினர் எஸ். நாகரத்தினமும் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகளும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கு பற்றினர்.

நகராட்சி மன்றத்தில் எதிரணியில் அங்கம் வகிக்கும் பொ. ஐ. மு., ஐ. தே. க., மு. காங்கிரஸ் உறுப்பினர்கள் இதில் பங்குபற்றவில்லை.

காலை 8 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமானது,

உண்ணாவிரதத்தில் பங்குபற்றாத நகர சபைத்தலைவர் சூரியமூர்த்தி 10 மணியளவில் அங்கு வந்து உண்ணாவிரதம் இருந்தோருடன் கலந்துரையாடினார்.

உண்ணாவிரதிகள் மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்தனர்.

இந்தமகஜரை அவர் ஜனாதிபதி, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட முக்கியஸ்தர்களுக்கு அனுப்பி வைத்தார். (உ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org